# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 136/2024 DW.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கார்த்திக் | த–பெ /க.பெ. | பழனியப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 38/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025**

-----------------------------------------------------------------------------------------------------

**21.08.2025**

**முதல் விசாரணை:**

1) புகார்தாரர் யார் என்றே எனக்கு தெரியாது. 26.01.2024 அன்று நான் புகார்தாரரிடம் கடன் பெற்றதாக சொல்லி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார். 26.01.2024 அன்று நான் TNEB ல் பணி செய்து வந்தேன். அன்றைய தினம் காலை 8 மணிக்கு பணிக்கு சென்று அன்று மாலை வரை வேலை செய்து விட்டு மறுநான் காலையில்தான் வீட்டிற்கு சென்றேன். **மேற்படி நான் பணியில் இருந்ததற்கான TANGDCO –வின் சான்றிடப்பட்ட வருகை பதிவேடு எனது தரப்பு எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றை தினம் என்னுடன் 7 நபர்கள் வேலை செய்தனர். அதில் 4 நபர்கள் நிரந்தரபணியாளர்கள். 3 பேர் ஒப்பந்த ஊழியர்கள். எனது காசோலை புகார்தாரர் வசம் எவ்வாறு சென்றது எனக்கு தெரியாது. என் சகோதரர் மாரியப்பன் என்பவரிடம் என் அம்மாவின் பராமரிப்பிற்காக என்னிடம் இருந்து 5 காசோலைகள் 2 கடனுறுதிசீட்டு, 5 பச்சை நிற வெற்றுத்தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றார்.

என் சகோதரர் நான் கொடுத்த காசோலை எண் 000011 என்ற காசோலையை பயன்படுத்தி ரூ. 1 லட்சம் வேறு ஒரு நண்பரிடம் கடனாக பெற்றார். பின்பு காசோலை எண் 000012 பயன்படுத்தி ரூ. 20 ஆயிரம் வேறு ஒரு நபரிடம் கடன் பெற்றார். மேற்படி கடன்களை திருப்பி செலுத்திவிட்டு என்னிடம் தகவல் தெரிவித்தார். அதன் பின்பு HDFC வங்கியில் உள்ள எனது கணக்கைசுமார் 9 வருடங்களுக்கு முன்பு நிரந்தரமாக முடித்துவிட்டேன். மேற்படி வங்கியில் **நான் வங்கி கணக்கை முடித்துகொண்டதற்கான வங்கி கணக்கு பட்டியல் எ.சா.ஆ. 2 ஆகும்**. புகார்தாரர் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன். **அந்த அறிவிப்பு போதுமான முகவரி இல்லை என்று சொல்லி திருப்பப்பட்டது. அந்த பதில் அறிவிப்பு அஞ்சலக உறையுடன் எ.சா.ஆ. 3 ஆகும்.** நான் அரசு ஊழியராக இருந்து வருகிறேன். புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கும் தேவை எனக்கு இல்லை. புகார்தாரர் ரூ. 9 லட்சத்திற்கான வருவாய் ஆவணங்கள் (Source of Income) எதுவும் தாக்கல் செய்யவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.21 13:29:20 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)